மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.99/2021</u>

2026ம் ஆண்டு பிப்ரவரி 16ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தராஜ் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>16.02.2026 வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.36 கிரைய ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து விவரங்களும் மேற்படி வா.சா.ஆ.36 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரங்களும் வேறு வேறானவை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.36 கிரைய ஆவணமானது தாவா சொத்துக்களை பொறுத்து ஏற்படுத்தப்பட்டது என்று நான் சொல்கிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.36 கிரைய ஆவணமானது பிரதிவாதிகளின் தகப்பனாரால் கிரயம் பெறப்பட்ட ஆவணமா என்றால் ஆமாம் மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் வாரிசு முறையில் பிரதிவாதிகளுக்கும் தாவா சொத்தில் பங்கு உள்ளது என்றால் அவர்களுக்கு பங்கு எதுவும் இல்லை.

2. வா.சா.ஆ.36 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் வா.சா.ஆ.36 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரங்களை வைத்துக்கொண்டு பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமைகளை நாங்கள் மறுக்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் கடந்த 2010 ஆம் ஆண்டு அவர்கள் குடும்பத்திற்குள் ஒரு பாகபாக்கிய விடுதலை ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் வா.சா.ஆ.36 ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் கண்டுள்ளது என்றால் ஆமாம் ஆனால் செக்குபந்தி முத்துசாமி கவுண்டர் பூமிக்கு தெற்கு என்றும் சேமலை போயன் என்பவர் பூமிக்கு வடக்கு என்றும் கண்டுள்ளது மேற்படி சொத்து விவரத்திற்கு அடுத்ததாக தாவா சொத்து விவரமும் ஏற்படும் கண்டுள்ளது என்றால் அந்த சொத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை அவை தனித்தனியாக தான் உள்ளது.

3. வா.சா.ஆ.36 கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களும் தாவா சொத்துக்களும் பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் வேறு வேறு செக்குபந்திக்குள் உள்ளதாக கண்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் அதை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து எங்களுக்கு உரிமை உள்ளது என்பதை பொறுத்த ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்யாமல் வேறு சொத்துக்களை பொறுத்து பிரதிவாதிகள் பெயரில் வேறு கிரைய ஆவணத்தை தாக்கல் செய்து அதன் மூலம் நாங்கள் எவ்வித உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள பரிகாரத்திற்கும் தாக்கல்

செய்துள்ள ஆவணங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதால் இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.02.16 18:56:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்